2022 ஏப்ரல் 21]

நிதி ஆதாரம் வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, இப்பொழுது தாம்பரம் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டுள்ள நேரத்தில், அவர் குறிப்பிட்ட அந்தப் பகுதிகள், மாநகராட்சியில், ஒன்றியத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக இப்பொழுது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுவதோடு, நகர்ப்புற வளர்ச்சித் துறையின் சார்பிலும் வேண்டிய உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே, அவர் குறிப்பிட்டுச் சொன்னால், அந்தச் சாலைகளை மேம்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

147—

கால்நடை கிளை நிலையம்

***3706—திரு. இ.மா. மான்ராஜ்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு வட்டம், ஆயர்தர்மம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2022 ஏப்ரல் 21

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு வட்டம், ஆயர்தர்மம் கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ் அவர்கள்.

திரு. இ.மா. மான்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழக நிறுவனத் தலைவர், சத்துணவு தந்த சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் அவர்களையும், கழகத்தைக் கட்டிக்காத்த காவல் தெய்வம், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து காட்டிய மனிதப் புனிதவதி எங்கள் அம்மா அவர்களையும், கழக இணை ஒருங்கிணைப்பாளர் எதிர்க்கட்சித் தலைவர், கழக ஒருங்கிணைப்பாளர் எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆகியோரையும், எதிர்க்கட்சி கொறடா அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் போட்டியிட்ட என்னை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்காக உழைத்த கழக உடன்பிறப்புகளுக்கும், கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிக்கு உட்பட்ட வத்திராயிருப்பு வட்டம், ஆயர்தர்மம் கிராமம் முழுவதும் விவசாயப் பெருங்குடிமக்கள் வசிக்கும் பகுதியாகும். ஆயர்தர்மம் கிராமம் என்ற பகுதி கொண்டையன்பட்டி, சொரக்காபட்டி, மீனாட்சிபுரம், நல்லூர்பட்டி, தைலாபுரம், ஏகனாபுரம் மற்றும் இலந்தைகுளம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும்.

இந்தப் பகுதியில் சுமார் 5,000—க்கு மேற்பட்ட ஆடு, மாடுகள் வளர்க்கப்படுகின்றன. ஆயர்தர்மம் கிராமத்தில் உள்ள விவசாயிகள் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி பெற சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கோட்டையூர் கால்நடை மருந்தகத்திற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, விவசாயம் செய்யும் மக்கள் நீண்ட தூரம் சென்று வர சிரமப்படுகின்றனர். இதனால், அவர்களின் விவசாயப் பணி பாதிக்கப்படுகிறது. எனவே, அக்கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கால்நடை

2022 ஏப்ரல் 21]

கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிமுறைகளின்படி, புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்க, கால்நடை அலகுகள் 3,000–க்குமேல் இருத்தல் வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் தேவையின் அடிப்படையில், அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு, புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிக்கு உட்பட்ட வத்திராயிருப்பு வட்டம், ஆயர்தர்மம் கிராமத்தில் 3,018 கால்நடை அலகுகள் உள்ளதால் அங்கு கால்நடை கிளை நிலையம் மட்டுமே அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க, அரசின் செயற்குறிப்பில் இடம்பெறும்போது, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையைப் பெற்று, தக்க நடவடிக்கை எடுக்க, பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ் அவர்கள்.*

திரு. இ.மா. மான்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட மகாராஜபுரத்தில் இயங்கிவரும் கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும். மேற்படி மகாராஜபுரம் கிராமம், அதைச் சுற்றியுள்ள மாத்தூர், ரெங்கபாளையம், தம்பிபட்டி, கிருஷ்ணாபுரம் ஆகிய கிராமங்களில் சுமார் 10,000–க்கும் மேற்பட்ட ஆடு, மாடுகள் வளர்க்கப்படுகின்றன. எனவே, அப்பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான கால்நடை கிளை நிலையத்தை, கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், ஸ்ரீவில்லிபுத்தூர் நகரையொட்டி அமைந்துள்ள கால்நடை மருந்தகம் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்படுகிறது. இம்மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத்

தரம் உயர்த்த பல ஆண்டுகளாக அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்தும் இதுவரை தரம் உயர்த்தப்படவில்லை. மேலும், ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டு எந்த ஒரு கால்நடை மருத்துவமனையும் துவங்கப்படவில்லை. எனவே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான கால்நடை அரசு மருத்துவமனையை ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய வேளாண்மை ஆணையத்தின் வரையறையானது, ஒவ்வொரு 5,000 கால்நடை அலகுக்கும் ஒரு கால்நடை நிலையம் இருக்க வேண்டும் என்பதாகும். இதன்படி கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஒரு கால்நடை அலகு என்பது, பசு அல்லது காளை அல்லது எருது அல்லது எருமை அல்லது குதிரை அல்லது கழுதை, பத்து வெள்ளாடுகள் அல்லது பத்து செம்மறி ஆடுகள் அல்லது ஐந்து பன்றிகள் அல்லது நூறு கோழிகள் ஆகும். கால்நடைகளின் எண்ணிக்கை, கால்நடை அலகுகளாக மாற்றப்பட்டு, கால்நடை நிலையங்களோடு ஒப்பிடப்படுகிறது. அதனடிப்படையில், கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்படுகின்றன. அந்த வகையிலே ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு வட்டம், ஆயர்தர்மம் கிராமத்தைச் சுற்றி, சொரக்காபட்டி, கொண்டையன்பட்டி, நல்லூர்பட்டி மற்றும் தைலாபுரம் ஆகிய கிராமங்களில் 956 மாட்டினங்களும், 1,960 ஆட்டினங்களும், 102 கோழி இனங்களும் ஆக மொத்தம் 3,018 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு கால்நடை நிலையங்கள் அமைக்க மட்டுமே சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இருக்கின்ற கால்நடை கிளை நிலையங்களைத் தரம் உயர்த்த வேண்டும் என்ற வகையிலே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். எங்களுடைய துறையின் அதிகாரிகளை அனுப்பி, அதற்கான சாத்தியக்கூறுகள் இருக்குமென்றால், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர்

2022 ஏப்ரல் 21]

அவர்களின் அனுமதியைப் பெற்று, நிதி ஏற்பாட்டின்படி, அதைச் செய்து தருவதற்கான நடைமுறைகளை இந்த அரசு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

148—

சூரிய மின் வேலி

***691—திரு. மா. செந்தில்குமார்**:

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதியில் உள்ள விவசாய நிலங்களைப் பாதுகாக்க சூரிய மின் வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினருடைய கள்ளக்குறிச்சி தொகுதியில் யானை போன்ற வன உயிரினங்களின் நடமாட்டம் இல்லாததாலும், மான், காட்டுப் பன்றி, மயில், போன்ற சில வன உயிரினங்களால் ஏற்படும் பயிர்ச் சேதங்கள் மிகவும் குறைவாக உள்ளதாலும், சூரிய மின் வேலி அமைக்கும் தேவை எழவில்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட சின்ன சேலம், கள்ளக்குறிச்சி, தியாகதுருகம் ஆகிய ஒன்றியங்களிலுள்ள கருந்தலாகுறிச்சி, செம்பாக்குறிச்சி, கருங்குழி, ஈரியூர், வாணவரெட்டி, விளம்பாவூர், மலைக்கோட்டாலம், கணங்கூர், சாத்தனூர், கீழ்நாரியப்பனூர், ஒகையூர், பொரசக்குறிச்சி, வேளாக்குறிச்சி, நின்னையூர், சித்தலூர், கூத்தகுடி ஆகிய கிராமங்களில் நெல்,*